1972 ஆகஸ்ட் 21]

*235. வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலிருந்து அவினாசி, திருப்பூர், வெள்ளக்கோயில், தென்னிலை, சின்னதாராபுரம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி வழியாக திண்டுக்கல் வரை அரசு பேருந்து தடம் ஒன்று திறக்க செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், இத்தடம் எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்த வழித் தடத்தில் இருப்புப் பாதை இல்லாத காரணத்தாலும் மேலும் இந்த நீண்ட அளவு தூரத்திற்குத் தனியார் போக்குவரத்து ஏற்பாடு செய்ய முடியாது என்ற காரணத்தாலும் அந்தப் பகுதி விவசாயிகளும், வணிகர்களும் மிகுந்த சிரமப்படுகிறார்கள் என்ற காரணத்தால் இதைப் பற்றி அருள்கூர்ந்து கவனித்து இனிமேலாவது இந்தத் தடத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த வழித் தடத்தைப் பொறுத்த வரை சுற்றிச் செல்லுகிற வழித்தடம் என்று சொல்லி இருக்கிறார்கள். கோவைக்கும் திண்டுக்கல்லுக்கும் பல்வேறு வழிகளில் ஏராளமான விரைவுப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. சுற்றிச் செல்லுகின்ற வழித் தடத்தை ஏற்படுத்தினால் கட்டணமும் அதிகமாகும், நேரமும் அதிகமாகும், போதிய வருமானமும் இருக்காது என்ற காரணத்தால் இப்போது அது வேண்டா மென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: அமைச்சர் அவர்கள் இத் தடம் சுற்றிச் செல்லும் தடம் என்று சொன்னார்கள். இருந்தபோதிலும் பல கிராமங்களையும் போதுமான போக்குவரத்து இல்லாத பகுதிகளையும் இணைக்கக்கூடிய திட்டமாக இருக்கும் காரணத்தால் கிராம மக்களுக்குப் பலன் தரும் முறையில் அரசு இதை அனுதாபத்துடன் கவனித்து ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல் விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரை முக்கிய நகரங்களோடு தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலைகளையும் இணைப்பதில்தான் முன்னுரிமை தரப்பட்டிருக்கிறது. கிராமங்களைப் பொறுத்தவரை சாதாரண பஸ்களை விடுவதைப் பற்றி அரசாங்கம் யோசிக்கலாம்.

திரு. த. சோனையா : பெரிய நகரங்களுக்கிடையே பஸ் தொடர்பு இருக்கிறது. குக்கிராமங்களில் இருப்பவர்கள் நகரப் பகுதிகளுக்கு வர கஷ்டமாக இருக்கிறது. ஆரம்பத்திலே துவக்கிய ஜீப் பஸ்களை கிராமப் பகுதிகளில் விட்டு கிராம மக்களுக்கு நன்மை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கிராமங்களைப் பொறுத்தவரை ஜீப் பஸ்சை ஆதரிக்கின்ற வகையில் அரசாங்கம் திட்டத்தை மேற்கொண்டது. ஆனால் அது லாபத்தைத் தருவதாக இல்லை. அது பெட்ரோலில் ஓடுவதாகும். அண்மைக் காலத்தில் டீசலில் ஓடுகின்ற மினி பஸ்களை உருவாக்கி இருக்கிறார்கள். அதிலே ஒன்றிரண்டு வாங்கி பரிட்சார்த்தமாக பார்த்த பிறகு கிராமப்புறங்களுக்குப் பயன்படுத்தலாமா என்பதைப் பற்றி அரசாங்கப் போக்குவரத்துத் துறை பரிசீலித்து வருகிறது. முதலில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் அந்த மினி பஸ்ஸை வாங்குவதாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் உயர்நிலைப்பள்ளியில் போலீஸ் நுழைந்து மாணவர்களை அடித்ததாகக் கூறப்படுவது குறித்து

MR. SPEAKER : The hon. Member, Thiru J. James, has given notice under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the following adjournment motion to discuss a matter of urgent public importance, viz.,—

'That on 17th August 1972 the Police entered into Class rooms of St. John's High School at Palamcottah without the permission of the Headmaster and beat the students indiscriminately with lathis. Large number of students in Standards VI, VII and VIII were subjected to lathi charge and some of them were admitted in Hospitals. The school is consequently closed indefinitely and very serious situation has developed in Palamcottah and Tirunelveli following the said incident.'

The hon. Member, Thiru K. Suppu, has also given notice of a similar motion.